**கொழும்பை அண்டிய புகையிரத செயற்திட்டத்தின் கீழ் தொழிற்படுகின்ற கொழும்பை அண்டிய புகையிரத வினைத்திறன் முன்னேற்றச் செயற்திட்டத்தின் - 2020**

---

கொழும்பை அண்டிய புகையிரத செயற்திட்டத்தின் கீழ் தொழிற்படுகின்ற கொழும்பை அண்டிய புகையிரத வினைத்திறன் முன்னேற்றச் செயற்திட்டத்தின் 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2019 ஆகஸ்ட் 20 ஆம் திகதிய 3806 - எஸ்ஆர்ஜ (எஸ்எவ்) ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் (iv) ஆம் உறுப்புரையின் 4.02(அ) பிரிவிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

கடன் உடன்படிக்கையின் பிரகாரம், போக்குவரத்து அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராகவுள்ளதுடன் இலங்கைப் புகையிரதத் திணைக்களம் செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராகவுள்ளது. புகையிரத வலையமைப்பின் வினைத்திறன், நிலைபேறான தன்மை மற்றும் பாதுகாப்பு என்பவற்றை முன்னேற்றுவதே செயற்திட்டத்தின் நோக்கங்களாகும். செயற்திட்ட நடவடிக்கைகள் (அ) முன்னேற்றப்பட்ட செயற்பாட்டு வினைத்திறன் (ஆ) வலுப்படுத்தப்பட்ட பராமரிப்பு இயலளவு (இ) முன்னேற்றப்பட்ட புகையிரத பாதுகாப்பு மற்றும் (ஈ) தரமுயர்த்தப்பட்ட தொழில்நுட்ப பயிற்சி நிலையம் மற்றும் செயற்திட்ட அமுல்ப்படுத்தல் இயலளவு மற்றும் வலுப்படுத்தப்பட்ட எதிர்கால புகையிரத செயற்திட்டங்களின் தயார்ப்படுத்தல் என்பவற்றின் கீழ் அமுல்ப்படுத்தப்படுகின்றன. கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 33,878 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 192 மில்லியன் தொகையானதுடன் இதில் ரூபா 28,232 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 160 மில்லியன் ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. ரூபா 5,646 மில்லியன் மிகுதி தொகை இலங்கை அரசாங்கத்தால் நிதியிடப்படுகின்றது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2019 செப்தெம்பர் 06 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2024 திசெம்பர் 31 அளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது.

## 1.3 அபிப்பிராயம்

செயற்திட்டத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

| விபரம் | தொகை ரூபா மில்லியன் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| மீளாய்வாண்டின் போது இச் செயற்திட்டத்திற்கு பெறப்பட்ட ஏடிபீ நிதித் தொகை கொழும்பை அண்டிய புகையிரத செயற்திட்டம் என அழைக்கப்பட்ட ஏனைய செயற்திட்டத்திற்கு மாற்றப்பட்டிருந்தது. இதன் பினைவாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட இலங்கை அரசாங்கத்தின் வருடாந்த பாதீட்டு ஏற்பாடு அதே தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | 63.5 | இந் நிதி மாற்றம் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கடன் மீதி தொடர்பாக எந்தவொரு விளைவையும் ஏற்படுத்தமாட்டாது. | நிதிக்கூற்றுக்களில் சரியான பாதீட்டு ஏற்பாட்டை காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2.1 தீர்ப்பனவு செய்யப்படாத மீதிகள்

| கணக்காய்வு விடயம் | தொகை ரூபா மில்லியன் | தீர்ப்பனவு செய்யப்படாத காலப்பகுதி | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|
| ரூபா 194 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 2,642,014 பெறுமதியான கண்டியை அண்டிய புகையிரதத்தின் விபரமான திட்டத்தை தயாரிப்பதற்காக செயற்திட்டம் | 49 | 18 மாதங்கள் | 2018.05.09 ஆம் திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் வேலை ஆரம்பிப்பு முற்பணம் மற்றும் செயற்திட்டம் இடைநிறுத்தப்பட்டு | முழு முன்மொழிவுகளையும் அமுல்படுத்தும் போது அமைச்சரவை தீர்மானம் கருத்தில் கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | உருவாக்கப்பட்டிருந்ததுடன் ரூபா 49 மில்லியன் தொகையான வேலை ஆரம்பிப்பு முற்பணங்கள் செயற்திட்டத்தின் ஒப்பந்ததாரரிற்கு வழங்கப்பட்டிருந்தது. பின்னர் செயற்திட்டக் கூறு 2020 திசெம்பர் 31 இல் இடைநிறுத்தப்பட்டிருந்த போதிலும் வேலை ஆரம்பிப்பு முற்பண மீதி தீர்ப்பனவு செய்யப்படாமல் நிதிக்கூற்றுக்களில் தொடர்ந்து காணப்பட்டது. | ஈஆர்டி ஆல் மதிப்பிடப்பட்ட பின்னர் செயற்திட்ட நடவடிக்கைகள் 2021.04.30 இலிருந்து மீள ஆரம்பிக்கப்பட்டன. | |

## 2.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவ பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| 2019 மார்ச் 05 ஆம் திகதிய 01/2019 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்கள சுற்றறிக்கை | 2016 ஒக்தோபர் 28 இல் ஐ.அ.டொலர் 11 மில்லியன் கிரயத்தில் கொழும்பை அண்டிய புகையிரத செயற்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டிருந்தது. ஆகையால் செயற்திட்டத்தின் பதவியணியினரிற்கான சம்பளங்கள் மற்றும் படிகள் முகாமைத்துவ சேவைகள் திணைக்கள சுற்றறிக்கையின் பிரகாரம் செலுத்தப்பட வேண்டிய போதிலும் பழைய செயற்திட்டத்தின் அதே பதவியணியினரை வேலைக்கமர்த்துவதன் மூலம் 2019 ஆகஸ்ட் 20 இல் சீஎஸ்ஆர்ஐபி செயற்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு புதிய செயற்திட்ட விலைவீதத்தில் பழைய செயற்திட்டக் காலப்பகுதிக்காக ஐ.அ.டொலர் 160 மில்லியன் தொகையான பதவியணியினர் சம்பளங்கள் மற்றும் படிகள் முன்னைய ஆண்டுகளில் செலுத்தப்பட்டன. | அபிவிருத்தி நடவடிக்கைகள் மற்றும் செயற்திட்ட முகாமைத்துவத்திற்காக ஆர்ஈஐபி, நிதிக் கிரயம் - 12 இன் கீழ் கடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு நிதிகள் பெறப்பட்டிருந்தன. | முகாமைத்துவ சேவைகள் திணைக்கள சுற்றறிக்கையுடன் இணங்க வேண்டும். |

## 3. பௌதீக செயலாற்றல்

### 3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக செயன்முன்னேற்றம்

| கூறு | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | கணக்காய்வு விடயங்கள் | தாமதத்திற்கான காரணங்கள் |
|---|---|---|---|---|
| | எதிர்பார்க்கப்பட்ட பௌதீக செயலாற்றல் அலகுகள்/ சதவீதம் | அடைந்து கொள்ளப்பட்ட செயலாற்றல் அலகுகள்/ சதவீதம் | | |
| முதலீட்டுக் கிரயம் | 27 சதவீதம் | 17 சதவீதம் | செயற்திட்டத்தின் கீழ் அமுல்ப்படுத்தப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட 15 கூறுகளில் செயற்திட்ட காலப்பகுதியின் போது நாடளாவிய ரீதியில் தொலைத்தொடர்பு முறைமை மாத்திரம் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. | ஒப்பந்தங்களை வழங்குவதில் தாமதங்கள் |

**முகாமைத்துவத்தின் பதில்கள்** கருத்துரை வழங்கப்படவில்லை.

**கணக்காய்வாளரின் பரிந்துரைகள்** செயற்திட்ட நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட வேண்டும்.

### 3.2 ஒப்பந்த நிர்வாகம்

| இல. | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 2019 தொடக்கம் 2024 வரையான காலப்பகுதியில் கொழும்பு மெற்றோபொலிற்றன் புகையிரத வினைத்திறன் முன்னேற்ற செயற்திட்டத்தின் செயற்திட்ட முகாமைத்துவ பிரிவின் மதிப்பிடப்பட்ட கிரயம் ஐ.அ.டொலர் 2.33 மில்லியனாக காணப்பட்ட போதிலும் செயற்திட்ட முகாமைத்துவ பிரிவு 2 வருட காலப்பகுதியின் போது ஐ.அ.டொலர் 0.69 மில்லியன் மதிப்பிடப்பட்ட தொகையை விஞ்சி ஐ.அ.டொலர் 0.83 மில்லியன் தொகையை செலவிட்டிருந்தது. | இரண்டு செயற்திட்டங்களும் ஒரே பிஎம்யூ ஆல் கையாளப்பட்டதால் பிஎம்யூ கிரயம் சிறதளவு விஞ்சப்பட்டிருந்தது. | செயற்திட்ட செலவினக் கூறு செயற்திட்ட நிர்வாக கைநூல் மற்றும் கடன் உடன்படிக்கையின் பிரகாரம் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) பாணந்துறை - வெயாங்கொட தொடர்பான ஆரம்ப சாத்தியவள ஆய்வின் இறுதி அறிக்கையின் பரிந்துரைகளிற்கு முரணாக ஐ.அ.டொலர் 89.15 மில்லியன் 2019 ஆகஸ்ட் 20 இல் செயற்பாடுகளை தொடங்குவதற்கான முன்னுரிமைகளை கருத்தில் கொண்டு புகையிரத வினைத்திறன் முன்னேற்ற செயற்திட்டத்தின் கீழ் 13 மேலதிக புதிய செயற்பாடுகளிற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. | முன்னரான சாத்தியவள ஆய்வு அறிக்கையில் உள்ள அபிவிருத்தி தலையீடுகள் அபிவிருத்தியை மேற்கொள்வதற்கான அங்கீகாரம் அல்ல. | சாத்தியவள ஆய்வு அறிக்கையின் அடிப்படையில் முன்னுரிமைகள் இனங்காணப்பட்டு நிபுணத்துவ அறிவுடன் உத்தியோகத்தர்களால் நிதி உடன்படிக்கை மீளாய்வு செய்யப்பட வேண்டும். |
| (இ) நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சால் வழங்கப்பட்ட அவதானிப்புக்களை அடிப்படையாகக் கொண்டு 2018 மே 16 ஆம் திகதிய அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் 04 முன்மொழிவுகளிற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. எனினும் போக்குவரத்து அமைச்சு செயலாளரின் மேற்படி அங்கீகாரத்திற்கு முரணாக ஐ.அ.டொலர் 62.79 மில்லியன் தொகையை ஒதுக்கீடு செய்து இன்னொரு 13 உப முன்மொழிவுகளிற்காக ஏடிபீ உடன் உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டிருந்தது. | ஆர்ஈஐபி இல் உள்ளடக்கப்பட வேண்டிய அபிவிருத்தி தலையீடுகளின் பட்டியல் SLR, MOT, ERD போன்றவற்றுடன் ஏடிபீ பணிக் கூட்டத்தில் மேலும் கலந்துரையாடப்பட்டது. | வேலை முன்மொழிவுகளுக்கான நிதி ஒதுக்கீடு குறித்து அமைச்சரவைத் தீர்மானம் கருத்தில் கொள்ளப்பட வேண்டும். |

### 3.3 முகாமைத்துவ செயற்திறனின்மை

| கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|
| காலப்பகுதிக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியின் குறைப்பயன்பாட்டிற்காக ரூபா 34 மில்லியன் கடப்பாட்டுக் கட்டணமொன்றை செயற்திட்டம் செலவிட்டிருந்தது. | அமைச்சு தொகுதிகளில் தொழிற்சங்க மாற்றங்களினால் ஏற்படுத்தப்பட்ட ஆட்சேபனைகள், திறைசேரி செயலாளரால் வழங்கப்பட்ட சுற்றறிக்கையில் எதிர்பார்க்கப்பட்ட பெறுகை இலக்கை அடைந்துகொள்வதில் தாமதம் போன்ற பின்வரும் காரணங்களினால் கடப்பாட்டுக் கட்டணங்கள் செலுத்தப்பட வேண்டியிருந்தன. | மேலதிக கிரயத்தை இழிவுபடுத்துவதற்கு செயற்திட்ட நடவடிக்கைகளை துரிதப்படுத்துதல். |

**3.4 சர்ச்சைத் தன்மையான லிடயங்கள்**

| இல. | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | செயற்திட்டத்தின் கிரய பகுப்பாய்வின் பிரகாரம் புகையிரத செயற்பாடுகளின் வினைத்திறன் மற்றும் பாதுகாப்பை அடைந்துகொள்வதற்கு தீவு முழுவதும் வானொலி தொலைத்தொடர்பு முறைமையை (ஐஆர்ரீஎஸ்) அமுல்படுத்துவதற்கு ரூபா 3,632 மில்லியன் தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும் பகுப்பாய்வில் இனங்காணப்பட்ட புகையிரத தாமதங்களிற்கு தாக்கம் செலுத்திய ஏனைய காரணங்களை செயற்திட்டம் கருத்தில் கொண்டிருக்கவில்லை. | புகையிரத தாமதங்கள் பற்றிய தெளிவான யோசனையைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டு ஒவ்வொரு தாமதப் பிரிவின் கீழும் நிமிடங்களில் ஏற்படும் தாமதங்களின் அளவு கருத்தில் கொள்ளப்பட வேண்டும். | உள்நாட்டில் இதே துறையில் நிபுணத்துவம் பெற்ற அலுவலகங்களின் உதவியுடன் சமூக-பொருளாதார கிரய நலன் பகுப்பாய்வு மற்றும் பொருளாதார நம்பகத்தன்மையை மீளக் கருத்தில் கொள்ளுதல். |
| (ஆ) | தேசிய திட்டமிடல் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட சமூக-பொருளாதார கிரய நலன் பகுப்பாய்வின் பிரகாரம் புகையிரதங்களின் தாமத நேரம் குறைக்கப்படுவதன் காரணமாக பிரயாண நேர சேமிப்பு கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், புகையிரத தாமதத்திற்கான முக்கிய காரணம், போதியளவு நிறைகள் (ballast), வார புகையிரதம் மற்றும் போதுமான உறங்கல்கள் இல்லாததால் எச்சரிக்கைகள் விடுக்கப்பட்டமை மேலும் அவதானிக்கப்பட்டது. | சமூக-பொருளாதார கிரய நலன் பகுப்பாய்வாளர்களைத் தயார்படுத்துவதில் NPD ஆல் கருதப்படும் அனைத்து காரணிகளும் NPD இன் கணிப்பீட்டுத் தாளில் இருந்து புலப்படவில்லை. மேலும், புகையிரத தாமதங்களிற்கு வழி மற்றும் பணி எச்சரிக்கைகள் முக்கிய காரணம் அல்ல. | உள்நாட்டில் இதே துறையில் நிபுணத்துவம் பெற்ற அலுவலகங்களின் உதவியுடன் சமூக-பொருளாதார கிரய நலன் பகுப்பாய்வு மற்றும் பொருளாதார நம்பகத்தன்மையை மீளக் கருத்தில் கொள்ளுதல். |
| (இ) | பயணச்சீட்டு முறைமையை அமுல்படுத்துவதற்கு ரூபா 4,502 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்ட போதிலும் புகையிரத பாதைகளை மின்மயமாக்குவதற்கான அடித்தளம் அமைக்கப்படாமல் புகையிரத செயற்பாடுகளின் வினைத்திறனை மேம்படுத்துதல் நிராகரிக்கப்பட முடியாதிருந்தது. | ஆர்ஈஐபி இன் ஏடிபீ பொருளாதார பகுப்பாய்வு, வருடாந்தம் 5.5% நடைமுறை வளர்ச்சியைக் கருத்தில் கொண்டிருந்தது. இரண்டு பகுப்பாய்வுகளும் அபிவிருத்தியின் பின்னர் (மின்மயமாக்கலுக்குப் பின்னர்) பயணிகளின் வளர்ச்சியைக் கருத்தில் கொண்டிருக்கவில்லை. | புகையிரத பாதையை மின்மயமாக்குவதற்கான அடித்தளம் பயணச்சீட்டு முறைமைக்கு முன்னர் பூர்த்தி செய்யப்பட வேண்டும். |